DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுகுமாறன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 06.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி தெற்கு வீதியில் வசித்து வருகிறேன். எனக்கு கார் வாங்கி விற்பனை செய்வது தொழில் ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கு எதாவது கார் வாங்கி கொடுத்தேன் என்றால் அவர் யார் என்றே தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும், அவ்வாறு விசாரணை செய்த போது ராஜசிம்மன் தவணை முறையில் ஸ்ரீ ராம் பைனான்சில் கார் வாங்கி தர கேட்டார் என்றும், அதன் அடிப்படையில் டாடா இண்டிகா TN 01 T 7074 எண் கொண்ட காரை 1,83,000/- ரூபாய் மதிப்புள்ள

காரை ரூ. 43,000/- கொடுத்து எடுத்து கொடுத்தேன் என்றும், 16.02.2007 இரவு 12.30 மணிக்கு ராஜசிம்மன் மற்றும் சிலர் என் வீட்டிற்கு வந்து கார் ராசியில்லை என்று கூறி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாரதிமோகன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 06.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது போட்டோ கிராப் தொழில் செய்து வருகிறேன். என்னுடைய ஸ்டுடியோவின் பெயர் சித்ரா. அந்த ஸ்டுடியோவின் கரியாப்பட்டினம் சாருமடை கடை தெருவில் உள்ளது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை, வருடம் 2006 ஆக இருக்கலாம் என்று நினைக்கிறேன். கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் இருந்து என்னை ஒரு போலீஸ் கேஸ் என்றும் போட்டோ எடுக்க கூப்பிட்டார்கள். நான் சென்றேன். அப்போது டிஜிட்டல் கேமரா ஒன்று வைத்திருந்தேன். இந்த போட்டோ டிஜிட்டல் கேமராவில் எடுக்கப்பட்ட போட்டோ ஆகும். என்னிடம் காட்டப்படும் போட்டோக்கல் என்னால் எடுக்கப்பட்டது தான். அந்த போட்டோக்கள் **அ.சா.ஆ.8 (12 வரிசை)** என்னை காவல் ஆய்வாளர் மறு நாள் அழைத்து நெல் வயல் அதில் இருந்து தெற்கு பக்கமாக இருந்த வீடு, வீட்டு வாசலில் கிடந்த உடைக்கப்பட்ட கண்ணாடிகள், வீட்டிற்கு முன்பு நிறுத்திவைக்கப்பட்ட கண்ணாடி உடைந்த கார் ஆகியவற்றை புகைபடம் எடுக்க சொன்னார்கள் நான் புகைபடம் எடுத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை

விசாரணை செய்யவில்லை. போட்டா எடுத்து கேட்டார்கள் போட்டா மட்டும் எடுத்து கொடுத்தேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும், விசாரணை செய்யும் போது அன்றைய தேதியில் என்னால் எடுக்கப்பட்ட புகைபடத்தினை அவர்களிடம் ஒப்படைத்தீர்கள் என்றும், அதற்கு முதல் நாள் இறந்தவரை எடுத்த புகைபடத்தியையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தீர்கள் என்றும் எதிரிகள் கேட்டு கொண்டதால் இறந்தவரின் புகை படத்தினை நான் எடுக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பார்த்த சம்பவம் நடந்த இடத்திற்கும் இறந்து கிடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 200 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். நான் எடுத்த டிஜிட்டல் கேமராவில் உள்ள போட்டோக்கள் அந்த கேமராவில் உள்ள மெமரிகார்டில் தான் போட்டோகள் பதிவாகும். நான் போட்டோகளை பிரிண்ட் போட வேண்டும் என்றால் அந்த மெமரி கார்டை தனியாக எடுத்து கம்யூட்டரில் இணைத்து பின்பு பிரிண்ட் செய்ய வேண்டும். நான் இந்த போட்டோக்கல் பிரிண்ட் செய்வதற்கு ரசீதுகள் நான் எதுவும் தரவில்லை. அவர்கள் எதுவும் என்னிடம் கேட்கவில்லை. என்னுடைய சாட்சியம் சாட்சிய சட்டம் 65(பி)க்கு விரோதமானது என்றால் சரியல்ல.